# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH. } **Righteousness exalteth a Nation: but Sin is a Reproach to any People.** { PRICE—TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௪ம். புத்தகம், சஞ்சிகை ௭.] ௲௮௱௫௰௪ம் ஞூ. சித்திரை ௴. ௰௩ ௳. வியாழக்கிழமை.—Thursday, April 13, 1854. [Vol. XIV. No. 7.



TERMS OF THE PAPER.

A single copy 2 shillings a year. Mail subscribers, free of postage, 4 shillings—TO BE PAID IN ADVANCE. If payment is delayed beyond the first quarter, 6 pence extra; if beyond the second, or July 1st, 1 shilling. To Native Agents, who will send ADVANCE PAY for 5 copies, we will send the 6th gratis, and at this rate for any number of copies.

Advertisements inserted for 3 shillings a square; less than a square 2 shillings. At this rate each will appear twice, *if the advertiser so requests.*

*All notices of deaths and marriages will be chargeable as advertisements.*

Communications must be *post paid* to receive attention.

The following persons will act as Agents for the Star.

JAFFNA—THE MISSIONARIES.
POINT PEDRO—L. LEISCHING, Esq.
TRINCOMALIE—{ Rev. J. WALTON, W. G. HALL, Esq.
COLOMBO—DR. C. ELLIOTT.
KANDY—MR. L. LAWTON.
BATTICALOE—Rev. J. KILNER.
MADURA—Rev. C. F. MUZZY.


[The Star, Other Papers, the Hospital, the Cause of Benevolence, and Support of Missionaries.]

உதயதாரகையே: எத்தனை அதிபதிகள் உனக்கு மேல் அதிகாரஞ்செலுத்த முயன்றிருந்தார்கள். அவர்கள் எவ்வளவு காத்திரங் கொண்டவர்களென்பதைக் காண்பித்திருக்கிறும். அவர்களையும் வென்று வேறுசிலரைச் சேதனம்பண்ணி இன்னும் அநேகருக்குஉயிர்கொடுக்கவுமிருக்கிறும். நீ பாலப்பராயமுள்ளவளாய் மாட்டின் பேசின் என்னும் இருபண்டிதரின் சத்துக்கொண்டுநடந்து, வாலப்பப்பராயத்தில் மையினர்த்துரையின் தாளத்துக்கு மிதித்து, விருத்தாப்பியத்தில் வேணல்துரையின் சுருதிக்கு இசையப் பாடிவருகிறும். நீ வாலப்பப்பராயத்தில் பெற்ற பிள்ளைகளாகிய அருணேதயம், உதையாதித்தனென்னுந் துறுங்லமனை இடைவயதில் அழிந்துபோக முதிர்வயதில் வித்தியாதர்ப்பணமென்னும் மயல்நீக்கும் புத்திரனைப்பெற்றும். இவருக்குந்தடம்வைக்க அவிவேக துரந்தரரும் நன்முயற்சிச் சங்காரருமாகிய அஞ்ஞானப் பூததர்ப்பணம்பூண்டோர் பொறுமையினிமித்தம் ஆரம்பிக்கிறுர்களாம். இதைக் கேட்க உன் பெற்றவயிறெரியுமே. முதன்முதல் உன்னை வளர்த்தவர்கள் தமிழர்களே. அதுபோல உன்னருமருந்தன்ன பிள்ளையாகிய வித்தியாதர்ப்பணமென்னும் விரதுரந்தரனையும் அத்தை வளர்த்து வருகிற நல்லுபகாரிகளையும் கறுத்தவர் கறுத்து வெள்ளையர் வெருண்டு எங்களுக்கொருகண் குருடாகில் எங்கள் அயலாருக்கு இருநேத்திரங்களும் குருடடைய வேண்டுமெனவிருமபி உன் சிரேஷ்ட புத்திரனைக் குருடனென்றும் இவன் பிறருக்கு ஆறுகாட்டுவதெப்படியென்றும், புன்மொழிகள்பேசி இவனுக்கு வருஷாந்தத்தில் தயிலம்வைப்போமெனக்கூறி உனக்குமுன் இவனுக்குக் காலசக்கர முடிவுசெய்ய அபேட்சித்திருக்கிறுர்கள். எல்லாரும் ஒவ்வொரு நற்செய்கையினுல் தத்தம் பேரைப் பின்சந்ததியார் நினைக்கும்படி ஒவ்வொரு நற்செய்கைகளைச் செய்வதைக் கண்ட அவிவேகி தன்பேரும் நிலைக்கும்படி ஊரிலுள்ள வீடுகளுக்குத் தீபோட்டதைப்போலச்செய்யத் தொடக்கத்திலும் ஆரம்பிக்கிறுர்களாக்கும். இத்திறத்தோர் கற்றறிந்த மூதறிஞருமல்ல, மத்திமருமல்ல, அதமரேயாம். இவர்கள் புதிய ஆக்கியோராகிய எங்கள்தேசத்துவாசராகிய வோல்க்கு, எவேட்சு, நெவின்சு, ஆனல், சந்திரசேகரர், கேரல், ஆறுமுகவர், கதிரவேற்பிள்ளை, முத்துச்கிஷ்டணதுரை என்பவர்களையும், பரதேசிகளாயினும் தமிழ்ப்பாஷையைக்கற்று அங்குள்ள விலைமதித்தற்கரிய இரத்தினங்களை எடுக்க அப்பாஷையில் நுழைந்து இவ்வூரவர்களுக்கு இகபரபிரயோசனம் உண்டாகும்படி சிலபுத்தகங்களை உண்டுபண்ணிய கனம்பொருந்திய கோசிந்தன், இஸ்போல்டிங், நயிற், பூர், பார்சிவல், கிரீன்துரை என்பவர்களையும் தங்களுக்கு உத்தம சிநேகிதரல்லவென்று நினைக்கிறது சரியா? இப்படி நினைப்பவர், யாழ்ப்பாணத்தாருக்காக உத்தமசீலனும், அதிவிவேகியும் தருமச்சிந்தையுடையவருமாகிய கோவரணமேந்துவின் ஏசன்றுத்துரையவர்கள் மூலமாய் முப்பத்திரண்டு அறங்களையும் வக்கிரிக்கச் செய்யத்தக்க பெரிய தரும சத்திரமாகிய யாழ்ப்பாணத்து வைத்தியசாலையைப்பற்றியும் இது முற்காலத்திலில்லாமல் தற்காலத்தில் உண்டுபட்டதாதலால், நாங்கள் அத்தருமத்திற்கு ஒன்றுங் கொடுக்கவேண்டியது அவசரமல்லவென்று சொல்வதற்குச் சரியே! இவ்வித அதருமர் பறங்கித்தெருவில் வாசராகிய ஐரோப்பைத்துரைமாரின் சந்ததியார் பிரசுரஞ்செய்ய நினைத்த புதினபத்திரிகையைப்போலத் தாரகையாகிய உன்னையும் உன் சிரேஷ்டபுத்திரனுகிய வித்தியாதர்ப்பணத்தையும் செயங்கொள்ளத்தக்க விசுவதர்ப்பணமென்னும் பத்திரிகையைப் பிரசுரஞ்செய்விக்க முயன்றுலிவர்களுக்கு நற்பேருண்டாகுமே. இவற்கொண்ட எரிச்சலும நீங்குமே. இத்திறத்தோரின் முயற்சியுந் தொடக்கமும் இப்படியிருக்குமாகில் இவர்கள் சமாதானரகிதராய் சாதிசங்கத்து வாழ்பவராவார். தாயும்பிள்ளையுமென்றுலும் வாயும் வயிறும்வேறேயென்பதினுல் நீயும்உன் புத்திரனும் ஒருகாரியத்தைப்பற்றி வாக்குவாதம்பண்ணினதைத்தெருவிற்சண்டை கண்ணுக்குப் பிரீதியென்றுபார்த்து நகைத்தார்கள். யாழ்ப்பாணத்தவர்கள் நன்மைசெய்வதற்கடுத்த முயற்சி உடையவர்களல்லவா? ஐரோப்பையார், அமேரிக்கர் என்பவர்களிலுந் தருமத்துக்கென்று அதிகபொருளை வீணிலே செலவுபண்ணி ஊரோச்சம் வீடு பட்டிணியென்றதுபோலவும், உட்சுவரிருக்கப் புறச்சுவர் தீற்றுகிறதுபோலவும், பட்டமரத்துக்குத் தண்ணீர் இறைக்கிறவர்கள்போலவும், வீண்கோலக்காரருக்கும்வேலைசெய்யாத பிராமணருக்கும் வடதேசத்திற் சிவஸ்தலங்களுக்கும், மாளயம், திவசம், அந்தியேட்டி, பூசை, திருவிழா, வாணவிளையாட்டு, கூத்து, சூது, குடி முதலானவைகளுக்கு அள்ளிச்சொரியும் பணம் வட்டுக்கோட்டை, உடுவில், பேட்டை, சுண்டிக்குளி, நல்லூர், கோப்பாய் முதலான இடங்களிலிருக்கிற சாத்திரப் பள்ளிக்கூடங்களைப் பார்க்கிலும் பதின்மடங்கு பெரிதான சருவ சாஸ்திரப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கப் போதுமானதாயிருக்குமே. எங்கள் சாதியார் ஸ்தாபித்திருக்கிற சாத்திரப் பள்ளிக்கூடங்களும் அச்சுக்கூடங்களும் எத்தனை. வண்ணைநகரிற் சில வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட இங்கிலீசுப் பள்ளிக்கூடமெங்கே! வண்ணைநகரில் அதன்பின்தோன்றிய பிடியரிசிப்பள்ளியும், அச்சுக்கூடமும் வதிரியில் வித்தியாசாலையும் என்ன அவதிப்படுகின்றன!

ஊர்ப்பிறந்த கிறிஸ்தவர்கள் ஸ்தாபித்திருக்கிற வேலணை, நெடுந்தீவிற் பள்ளிக்கூடங்களுக்கும் சபையார் சம்பளம் நிறுத்தவே என்னசம்பவிக்குமோ! எங்களூரவர்களுக்குள் சுயதேச பிறதேசக் கூட்டுவியாபாரசங்கம் ஏதுமொன்றுண்டா? நாட்டுக்கொட்டையிற் செட்டிகள் நம்மூருக்கு முருங்கையிற் குரங்குகள்போல வந்திருப்பதைக்கண்டும் இன்னுமிவ்வித முயற்சிக்கு நம்மூரவர்கள் ஆரம்பியாமலிருக்கிறுர்களே. என்றைக்கும் பாதிரிமார் மீண்டுகொடுப்பார்களா? அப்படி அவர்கள் செய்யத்துணிந்திருந்தாலும் அப்படியிருக்கவிரும்புவது உசிதமா? பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலே படிப்பவர்களுக்கு அன்னவஸ்திரங்களைக் கிரயத்துக்கு வாங்கக்கொடுத்து அத்துடன் உபாத்தி தெட்சணையுங் கூட்டிக்கொடுக்கக் கெதியற்றவர்களா? கொடுக்கும்பணத்துடன் கொஞ்சங்கூட எடுத்தால் பலதுள்ளி பெருவெள்ளம் போலாமே. முன்பின் முப்பதுவருஷக்காலமாகச் சபையாராகிறவர்களுக்குப் பிறதேசக்குருமாரும் சபையாரும் சீவனுர்த்தத்துக்கு வழிசெய்து வந்திருக்க இவ்வளவுகாலத்திலுஞ் சபையிற் சேர்ந்தவர்களெல்லாரும் தங்கள் குருமாருக்குச் சூடுமிதிக்கிற மாட்டின்வாயைக் கட்டியிருப்பதுபோலச் செய்திருப்பது சரியோ? அந்தந்தவிடத்திற் சபையாரெல்லாருங்கூடி தத்தங் குருவைத் தாபரிக்கத்தக்கதாக தத்தம் போசனத்தில் ஒருபங்கெடுத்துக் கொடுத்தால் குருமாரும் நமக்குள் கட்டுப்படுவார்களே. இவ்வித முயற்சிகளுக்கு இவ்வூரவர்கள் உடன்படுங்காலமெப்போவரும். இதைக்குறித்து இன்னுமொரு கடிதஞ்சுருக்கமாய் எழுதியனுப்புவேன். இப்படிக்கு, செ. வு.

யாழ்ப்பாணம்பேட்டை. கார்த்திகைமீ. ௰௮௳.

## The Morning Star.—உதயதாரகை.

உதயதாரகையின் முகாமைத்துரைக்கு.—கனம்பொருந்திய ஐயாவே: மாதம் இரண்டுமுறை நீங்கள் பிரசித்தம்பண்ணுகின்ற உதயதாரகையென்னும் புதினபத்திரிகை எங்கள் நாட்டிலே சத்தியவெளிச்சத்தைக் காலுகின்றபடியால் அது அதிகம் பிரபலியப்பட்டுஇன்னும்அநேகர் அதற்குக்கையொப்பக்காரராக வரும்படிமிகவும் அவாக்கொண்டவனுயிருக்கிறேன். ஏனெனில், அது வண்ணர்பண்ணையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தமிழ் அச்சுக்கூடத்தும் பாப்புமதக் குருமாருக்கும் அவர்கள் பொய்ப்போதனைகளுக்கும் ஒரு தடையாயிருக்கும். ஞானக்கும்மி முதிலியவற்றின் ஆக்கியோரும் அதைப் பிரசித்தப்படுத்தினவர்களும் முப்பத்தைந்து வருஷக்காலமாகக் கிறிஸ்த குருமார்செய்த ஒழுங்குகளையும் அவர்கள் பட்ட பிரயாசங்களையும் குழப்பி அடிதலைமாற்றிப்போட்டோமென்று வீணாய் நினைக்கக்கூடியதாயிருக்கும். ஆனல் அவர்கள் எண்ணத்துக்கு மாறுகவும் அவர்களுக்குக் கண்டிப்பாகவுந் தங்கள் தாரகைவழியாய் இரண்டொரு கடிதங்களைப் பிரசித்தப்படுத்தினவேளையில் அவர்கள் பிரயோகித்த அம்புகள் அதிவேகத்துடன் பறந்ததாகக் காணப்பட்டுங் கிறிஸ்துமார்க்கமென்னும் இலக்குக்குக் கிட்டினபொழுது அந்த அம்புகள் தெறித்துத் திரும்பவும் அதை எய்தவர்களிடத்துக்கே பறந்தோடிப்போய்விட்டதாகக் கண்டோம்,

தங்கள் தாரகை இவ்வூரிலிருக்குங் கிறிஸ்தவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் மற்றுஞ் சகலருக்கும் ஏற்றதாய் அதின்மூலமாக உலகத்தினெப்பகுதியிலும் நடந்துவருகிற விசேஷ புதினசங்கதிகளை அறியக்கூடிய ஒருபுதினபத்திரிகையாயிருக்கின்றதே. ஆகிலும், அது கொஞ்சக்காரியங்களைமாத்திரம் அடக்கக்கூடிய ஒருசிறுபத்திரிகையாயிருந்தும்,இவ்வூர்ப்பிறந்த கற்றறிந்தவர்களில் அநேகர் அதைவாங்கி வாசித்து அதினுல் பலனடைகிறுர்களென்பதைக் காணும்பொழுது மிகவுஞ் சந்தோஷப்பட்டு இன்னுமனேகர் கையொப்பக்காரராய்வருவதினுல் இப்பத்திரிகையும் அதிகம் விசாலங்கொண்டதாக வருமென்று காத்திருக்கிறேம். ஆனல், தாரகையை வாங்குபவர்களெல்லாரும் அதைப் பெருப்பிக்கும்படிக்கேற்ற பிரயெத்தனங்களைப் பண்ணுகிறுர்களோ என்ற கேள்வியைச் சகலரும் உற்றுத்தியானிக்கும்படி விருப்பத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். உதயதாரகையைவாசிக்க அநேகர் பிரியப்பட்டும் அதை விலைக்குவாங்கப் பிரியமில்லாதவர்களாயிருக்கிறுர்கள். ஆகையால் இதைவாங்குகிறவர்கள் ஒவ்வொருவரும் தங்கள்பத்திரிகையை அப்படிப்பட்ட ஆட்களுக்கு இரவல்கொடுத்து வாசிக்கச்செய்து, அவர்களும் ஒவ்வொரு பத்திரிகைக்குக் கையொப்பக்காரராக வரும்படி உதவிசெய்கிறுர்களா? இவ்விதமாகக் கையொப்பக்காரர் அதிகப்படும்பொழுது பத்திரிகையும் பெருப்பிக்கப்படக்கூடுமென்று அறியார்களா? இப்படிக்கு,

ஓர் கையொப்பக்காரன்.

எங்கள் கடிதக்காரன் மேலேகேட்டுக்கொண்ட வினவை நாம் சகலரும் உற்றுப்பார்க்கவேண்டியிருக்கின்றது. கிறிஸ்தமார்க்கம் விருத்தியடைந்திருக்கிற எத்தேசத்தைப்பார்த்தாலும் அத்தேசத்தவர்களைச் சீர்தேற்றத்துக்கும் மகாமேன்மையான நிலைபரத்துக்கும் வரப்பண்ணினது புதினபத்திரிகைகளல்லவா? அதுபோல இத்தேசத்தவர்களும் புதினக்கடுதாசிகளைவாங்கி வாசித்துவருவார்களானல், இவர்கள் நிலைபரமும் அப்படிவராதா? இவ்வருடம் எங்கள்பத்திரிகைக்குச் சில புதுக் கையொப்பக்காரர்சேர்ந்திருக்கிறுர்கள். அதினுல் நமக்கு அதிக சந்தோஷம். இன்னுமனேக கையொப்பக்காரர் தேவையாயிருக்கின்றது.

## Hindu Tricks.—தந்திரவித்தை.

கனம்பொருந்திய ஐயாவே: தங்கள்தாரகையின் ௰சம். புத்தகம், ௨ம். சஞ்சிகையிற் பதிப்பிக்கும்படிக்கெழுதியனுப்பின தந்திர வித்தையென்னவெனில்,

௨. தந்திரக்காரர் கல்லையெடுத்துச் சகலருக்குங் காட்டிக் கறிசமைத்து இது குறளிவித்தையென்று சொல்லுகிறுர்கள்.

அவர்கள் நிச்சயமாக அப்படிச்செய்யாமல் மாக்கல்லையெடுத்துத் துண்டுதுண்டாயுடைத்துச் சட்டியிற்போட்டு மசாலையரைத்துக் குழம்பாகக்கூட்டி அடுப்பில்வைத்துக் கொதிக்கிற சமையத்திற் சோற்றுக்கற்றுழையைக் கொண்டுவந்து அந்தக்கறியிற் பிழியக் கல்லானது மெதுவாய்ப் போய்விடும் ஆனல் அதைச் சாப்பிடக்கூடாது. இவ்வகையாய்ச் சனங்களையனுப்புகிறுர்கள்.

௩. தந்திரக்காரர் நெருப்புத்தணல்களாலும் எரிகிற கட்டை விறகுகளாலும்நிறைந்த சட்டியைக் கையிலேந்திக்கொண்டு பசாசுடைய அனுக்கிரகத்தினுல் தங்களுக்கு இயாதொரு சேதமுமில்லையென்று சொல்லுகிறுர்கள். அவர்கள் அந்தச் சட்டியில் தணலைக் கொட்டுவதற்குமுன்னே கற்றுளஞ்

சோற்றை அந்தச்சட்டிக்குள்ளே நாலுவிரற்கடை
யளவாகப் போட்டு அதற்குமேலே நெருப்பைக்கோ
ட்டிக் கையிலேந்துவார்களானால் அது அவர்களு
டைய கையைச் சுடமாட்டாது. மற்றவர்களோ ப
சாசு அப்படிச்செய்யும்படிக்கு உதவிசெய்கிறதெ
ன்று எண்ணுகிறார்கள்.

ச. தந்திரக்காரர் ஒரு நீண்ட பள்ளம்வெட்டி அ
தற்குள்ளே பெரிய கட்டைகளைப்போட்டுத்தீயை
க்கொளுத்தி அது தணலாய்ப்போனபின் வேறு
பெரிய உத்திரங்களினால் அந்த நெருப்பையமுக்கி
நன்றாய் ஒப்பசெப்பம்பண்ணி அதின்மேல் நடந்து
ஒருசேதமுமின்றி வெளியே வருகிறார்கள். அதைக்
காண்கிறவர்களோ அதிசயித்து இதென்ன இவர்க
ள் மந்திரவாதிகளல்லவோ என்று சொல்லி அவர்
களுக்கு அதிகமாய் அஞ்சுகிறார்கள். அவனோ, உ
ண்மையாய் அப்படிச்செய்யாமல் முருங்கைச்சா
று, சிலந்திநாயகம், நாராயணனசுள்ளி, இம்மூ
ன்றையும் அரைத்து ஒருவருக்குந்தெரியாமற் காலி
ற் பூசிக்கொண்டு நன்றாயமுக்கிக் கல்லுப்போலாக்
கப்பட்ட நெருப்பின்மேல் வெகுசீக்கிரமாய் நடந்து
போவார்கள். அதினாலே அவர்களுக்குஇயாதொரு
சேதமும் வரமாட்டாது. மற்றவர்களோ இவர்களு
டைய தந்திரத்தையறியார்கள்.

ரு. தந்திரக்காரர் மற்றவர்கள் அதிகமாய்ப் பயப்
படத்தக்க ஒருசத்தமுண்டாகச்செய்து அது பசா
சுடைய சத்தமென்றுசொல்லி, அந்தப் பசாசைத்
துரத்தும்படிக்கு வெகு பணம்வேண்டுமென்றுசொ
ல்லிப், பணத்தை வாங்கிக்கொண்டு அந்தச்சத்த
முண்டாகாதபடிக்குச் செய்கிறார்கள். அவர்களோ
உண்மையாக அப்படிச்செய்யாமல் ஒரு தேங்கா
ய்க் குடுக்கைக்குள்ளே, இரசம், ஊசிக்காந்தம்,
சாராயம், இம்மூன்றையும்விட்டுக் காலைப்பனியி
ல்வைக்க அது அன்றுசாயந்தரமுதல் மறுநாள்கா
லைவரைக்கும்பயங்கரமுள்ள சத்தமுண்டாகும். ஆ
னால் அது எந்தவிடத்திலிருந்து உண்டாகிறதென்று
தெரியமாட்டாது. பின்பு பகலெல்லாம்நின்று மறு
படியுஞ் சாயந்தரமுதற்காலைவரைக்குமுண்டாகும்.
அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டபின்பு குடு
க்கையை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்.
அப்பொழுது சத்தம் நின்றுபோகும்.

ஆ, இதென்ன தந்திரமோ, மந்திரமோ? தந்திர
மேயன்றி மந்திரமேயில்லை. மந்திரமென்று மயங்
கித் திகைக்கவேண்டாம். இப்படியே அவர்கள்செ
ய்கிற ஒவ்வொன்றுந் தந்திரமே. வயிற்றுக்காகப்பி
ழைக்கிறார்கள். பணஞ்சம்பாதிக்கிறதே அவர்களு
டைய முழுநோக்கமாயிருக்கிறது. தந்திரக்காரர்க
ளே, நீங்களெவ்வளவுகாலஞ் சனங்களை எத்துவீ
ர்கள். உங்கள்தந்திரத்தையே விட்டோயுங்கள், அ
ல்லாதிருந்தால் பயங்கரமான முடிவையடைவீர்
கள். இப்படிக்கு, ஏச். ம்.

## உதயதாரகை.

௲அ௱ருச ௵. சித்திரை ௴. ௰ரு ௳.

### The Victory of Faith.—விசுவாசசெயம்.

ஒரு ஆமீனியச்சபையின் மூப்பு தன்னிருதயத்தி
ல் உணர்த்தப்பட்டுப் பராபரனுடைய சனங்களுட
னே இச்செலவு சேர்ந்துகொண்டான். அவன் வெ
குகாலமாய்த்தான் இகபரபிரயோசனங்களை விரும்
பி மாய்மாலமாய்க் காலம்விட்டு வந்தானென்றும்,
கிறிஸ்துவினுடைய வேலைக்காரனாய் வரவேண்டு
மென்ற எண்ணந் தனக்குப் புதிதாய் வந்ததென்று
ம், இந்த எண்ணஞ் சிலகாலமாய் மனதைக் குழப்
பிக்கொண்டிருந்ததென்றும், அதினால் அவனுக்கு
வரவர மனஸ்தாபம் அதிகப்படத்தான் ஆண்டவ
ரைச் சேவிக்கத் தீர்மானித்தேனென்றுஞ் சொன்
னான். இதற்குமுன் அவன், சாஉய. பிள்ளைகளுள்
ள ஒருபள்ளிக்கூடத்தைப் படிப்பித்து மாதமொன்
றுக்கு, ரு. பவுன் சம்பளம்வாங்கி வந்தவன். இப்
படியிருக்குஞ்சமையத்தில் தான் கொன்ஸ்தாந்தி
னேப்பிள் என்ற பட்டணத்திற்குப்போக உத்தரவு
தரவேண்டுமென்று தனது விசுப்புக் குருவினிடத்
திற்கேட்டான். அவர் ஏன் நீ போகிறாயென்று கே
ட்டதற்கு நான், ருய. பவுன் கடன் கொடுக்கவே
ண்டியதாதலால் போகப்போகிறேனென்றான். விசு
ப்பு அதைக்கேட்டு நீ போகவேண்டாம், நானே அ
ந்தக்கடன் கொடுக்கிறேன். நான் உன்னை ஒருகு
ருவாக்கப்போகிறேனென்றார். இப்படி அவர் முன்
னுமொருமுறை சொன்னபொழுது அவன் அதற்கு
உடன்படவில்லை. இப்பவும் விசுப்பு விடமாட்டா
ரென்றதை அறிந்து தானிருந்த ஊரிலேதானே கிறி
ஸ்தவர்களுடனே சேர்ந்துகொள்வேனென்றெண்
ணியுஞ் சேர்ந்தால் உலகப்பிழைப்பை இழந்துபோ
வேனென்றெண்ணியும், வேறே சீவனத்துக்குடுத்
த பிழைப்புத்* தனக்குத் தெரியாதென்றறிந்தும்,
மற்றைநாள் ஒரு கடைக்குப்போய் ஒரு சிவத்தக்
குல்லா வாங்கி முப்புவாகத் தான் அணிந்திருந்த
கறுத்தக் குல்லாவை எறிந்து இதைத் தலையிற்
போட்டுக்கொண்டு ஸ்தேவானென்னுங் குருவான
வரின் வீட்டுக்குப்போனான். இந்தச்செய்தி பட்ட
ணமெங்கும் பரம்பிவிட்டது. உடனே சனங்களும்,
சாஉய. பிள்ளைகளுந் திரண்டு கல்லுக்களினால்
அந்தக் குருவின் வீட்டுக் கதவுக்கு எறிந்தார்கள்.
ஆனால் அங்கிருந்த இங்கிலீசுத் தானாதிபதி தனது
போர்க்கோலத்துடன் வெளிப்பட்டு அவனைத் தன்
வீட்டுக்கு அழைத்துப்போய்ப் பின்பு விசுப்புக்குரு
வினிடத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவரும்
அவர் சனமும் இவனை இனிச் சமாதானமாய் நட
த்துவோமென்று வாக்குப் பண்ணுவித்துக்கொண்
டார்கள். அதுநாள்முகவனயாக அவனுக்குயாதொரு
தொந்தரவுமில்லாமல் நடந்துவருகுது. அவன் தை
யல்வேலை பழகுகிறான். ஒருநாள் நாலுபென்சுவீ
தமாக உழைக்கிறான். ஆகிலும் நம்பிக்கையிற் பெ
லன்கொண்டு பராபரனிற் பற்றுக்கொண்டு விசுவா
சத்துடன் நடக்கிறான்.

American Clocks.—மணிக்கூடு. அமேரிக்காக்
கண்டத்தைச்சேர்ந்த கன்னேக்றிக்கற் என்ற மா
காணத்தில் நூகேவின்என்னும்பட்டணமுண்டு. அ
து வரவரச் சாத்திரங்களிலும் வித்தைகளிலுந்தேறி
இப்போ ஒரு முக்கியமான பட்டணமாய் விட்டது.
யாழ்பபாணத்தில் வந்துபோன மைனர்த்துரை அ
ங்கே வாசம்பண்ணுகிறார். மணிக்கூடுகள் அங்கே
ஏராளமாய்ச் செய்யப்படுகின்றன. அவைகள் செ
ய்யப்படும் ஒரு கம்மாலையில், சாருய. பெயர் வே
லை செய்கிறார்கள். ஒருநாளையில் ஏறக்குறைய,
சூா. மணிக்கூடு வீதமாக மாசந்தோறும், ய'டுது.
மணிக்கூடுகள் செய்துமுகிக்கிறார்கள். போனவரு
ஷத்தில் ஏறக்குறைய, ாருயஞ. மணிக்கூடுகள்
செய்து முகித்தார்கள். இந்தவருஷம், உாது. முடி
யுமாம். இக்கம்மாலையிலிருந்து உலகத்தார்யாவரும்
மணிக்கூடுகளை வாங்குகிறார்கள். யாழ்ப்பாணத்தா
ரும் அநேகர் வாங்கிவைத்திருக்கிறார்கள். இன்னு
ம் வாங்குவார்கள். சிலமணிக்கூடுகள் இப்போ வ
ழியில் வருகின்றன. இக்கம்மாலையின் முதலாளி
பத்துப்பவுன் முதல்கொண்டு இத்தொழிலைத் தொ
டங்கினார். அப்பட்டணத்தில்இதுமாத்திரமல்ல, வே
றுபொருள்கள்செய்கிற பல கம்மாலைகளுமுண்டு.

Trick of a Goldsmith.—வங்காளத்திற் பிரசித்
தம் பண்ணப்பட்ட ஓர் புதினப் பத்திரிகையிலே,
தட்டானொருவன் செய்த சூட்சத்தைப்பற்றி ஒரு
கதை சொல்லப்பட்டிருக்கின்றது. எப்படியெனி
ல், பணக்காரனொருவன் தன்னுடைய வீட்டில்
வைத்து வணங்கும்படி தனக்கு ஒரு விக்கிரகம் செ
ய்துதரச்சொல்லி ஒருதட்டானுக்குக் கட்டளைபண்
ணி, அவன் யாதொரு கள்ளமுஞ் செய்யாதபடிக்கு
ஒரு காவற்காரனையும்வைத்தான். ஆனாலும் அந்
தத் தட்டான் இரவிலே வீட்டுக்குப் போய்க்கொள்
ளுகிறதற்கு இடமிருந்ததினால் அவன் அங்கே போய்
இதைப்போலொத்த ஒருவிக்கிரகத்தைவார்த்து அ
தற்குப் பொற்பூச்சுப்பூசி அதைக்கொண்டுபோய்க்
குளத்துக்குள்ளே ஒளித்துவைத்துவிட்டான். ப
ணக்காரனுக்குப் பொன்னாலே வார்த்த விக்கிரகம்
முடிந்தபொழுது, அந்தத்தட்டான் அந்த விக்கிரகத்
துக்கு தான் முதன்முறை பூசைபண்ணும்படி இ
டங்கொடுக்கவேண்டுமென்று கேட்க உத்தரவாயி
ற்று. அப்பொழுது அந்தவிக்கிரகத்தைக்கொண்டு
போய்த் தான் முன்னே ஒளித்துவைத்த குளத்துக்
குள்ளே ஒளித்துவைத்து அங்கேயிருந்த விக்கிரகத்
தை எடுத்துப் பணக்காரனுடைய வீட்டுக்குக்கொ
ண்டுபோனான்.

The Age of Gold.—பொன்காலம். ஆபிரிக்கா
த்தேசத்தின் தென்முனையிலே பொன்காணப்பட்
டிருக்கின்றது. இந்தமாதம், ரூ. திகதி பதித்த கொ
ழும்பு ஒப்சேபர் என்னும் புதினப்பத்திரிகையில்
அதைக்குறித்துப் பெரிதாய்ப் பேசியிருக்கின்றது.
நன்னம்பிக்கையென்னும் அந்த ஆபிரிக்கா முனை
யிலிருந்து நமக்குவந்தசெய்திகளும் பொன்கண்டுபி
டிக்கப்பட்டதென்றும் அதைக்குறித்து அதிகமுயற்
சிஉண்டாகின்றதென்றும் அகப்பட்டபொற்கட்டிக
ள்சிலது சற்றே பெரிதென்றுஞ் சொல்லுகின்றது.
இலங்கையிற் காணப்பட்டபொன் மெத்தக்கொ
ஞ்சம். பொன்னரிக்க மழையும் வந்துவிட்டது.
அரித்தெடுத்த பொன்னுஞ் செலவுக்குக்காணாது.

Egyptian Railway.—இருப்புச்சலாகைவீதி மா
சிமாதம், உஎ. திகதியளவில் எகிப்திலே, சடு.
மைல் நீளத்துக்குப் போடப்பட்டாயிற்று. அதில்
இரதங்கள் செல்லுங்கெதி சொற்பந்தான். ஒரும
ணித்தியாலத்துக்குப் பதினைந்துமைல்வீதம் அதிற்
செல்லுகின்றது.

### Foreign News.—பரதேசசமாசாரம்.

இங்கிலாந்திலேமாத்திரமல்ல ஏரோப்பையிலும்
யுத்த ஆரம்பம் வெகுமும்முரமாய் நடக்கின்றது. இ
ங்கிலாந்திலே யுத்தக்கூய்ச்சலிருக்கின்றது மாத்
திரமல்ல அதின்துறைகளிலும் இதுதான்பேச்சு.
போட்ஸ்மௌது என்னும்பட்டினத்திலே கலைவ
லுவலாயிருக்கின்றது. பைங்குனி மாதமளவிலே
டௌன்ஸ் என்னுமிடத்திலே முப்பது போர்க்கப்
பலுக்குமேலேபோய்க் கூடவிருந்தது. அவைகளில்
ாஉய. பீரங்கியளவுக்குள்ள கப்பல்களுமுண்டு. இங்
கிலீசு பிறன்சுச்சேனைகள் ஒருமிக்க ஒரு இலட்ச
த்துப் பதினாயிரம். இதில் முக்கால்வாசி பிறன்சுக்
காரர். இங்கிலாந்திலே இந்தக்குழப்பத்தினாலே தா
னிய தவசங்கள் மிகவுமொறுப்பு. விலைகள் இர
ட்டித்துக்கொண்டது. அமேரிக்காவிலும் விலைகூ
டிவிட்டது. அமேரிக்காவிற் கமக்காரர் கூடியள
வு இந்தவருஷம் அதிகதானியம் விதைக்கவேண்டு
மென்று புத்தியாக இங்கிலாந்திற்போயிருக்கும் அ
மேரிக்கன் தானாதிபதி எழுதுகிறார். பால்றிக்குடாக்
கடலிற்சேர்ந்த துறைகளிலிருந்து தானியதவசங்
கள் போர்க்கலாதிகளினாலே வாராமையால் இப்ப
டியானது. அங்கிருந்துதான் முன்னே இங்கிலாந்து
க்குத் தானியங்கள் வருகிறது.

உருசியராயனுக்கு அக்கிக்கரப்பன் வருத்தமாய்வ
ந்திருக்கின்றது. அவருடைய எடுப்புகளைப்பற்றிக்
குடிசனங்களுக்கும் பிரியமில்லை. இங்கிலாந்திலு
ள்ள சமாதானசங்கத்தார் இராயருக்கு ஒருதானா
பத்தியம் அனுப்பியிருக்கிறார்கள். அவர் அதைமி
குபட்சமாய் அங்கீகரித்துக்கொண்டார். தூதரை
இராசாத்திக்குமுன்பாகக்கூட்டிக்கொண்டுபோய்வி
ட்டார். பிறஞ்சு இராயனுஞ் சமாதானத்தைவிரு
ம்பி உருசிய இராயனுக்குத் தனதுகையினால் ஒருசீ
ட்டு, தை ௴ உகூ. திகதியிலன்றெழுதிச் சமாதா
னக்குடுதாசி இன்றைக்குக் கையெழுத்துவைக்கப்
படுமானால் முந்தினசீர்வெளிப்படும். அங்கங்கிரு
ந்து கிளம்பிப்போன சேனைகள் அதினதின் தான
த்துக்குத் திரும்பிப்போம். இன்றைக்கு நியாயமாக
வும் நீதியாகவும் தீர்ப்பதை விட்டுவிடக்கூடுமானால்
இங்கிலாந்தர் பிறஞ்சருடைய படைக்கலங்களின்
வலிமையையல்லோ சாத்திருக்கவேண்டுமென்று
சொன்னார். இதினாலவர் கனப்பட்டுக்கொண்டார்.
உருசியராயனெழுதின உத்தரந் திருத்தியின்றி இருப்
பதுமாத்திரமல்லாமல் பிறஞ்சு இராயனுக்கு இக
ழ்வாயுமிருக்கின்றது. இனி உருசிய இராயனாகிய நீக்
கிலாசு என்பவர் சமாதானங் கேட்கவேண்டிவரு
ம் இடமில்லை. பயங்கரமான கொடும் யுத்தம்நடப்
பதன்றி வேறுநம்பிக்கையில்லை. இப்படிக்காலங்
களிலே யேகோவா ஆளுகிறாரென்றும் நடப்பவை
களெல்லாம் தமது மகிமைக்காகவும் தமது இராச்
சியப் பிரபலியத்துக்காகவும் நடத்தப்படுமென்றும்
நினைத்துக்கொள்ளவேண்டும்.

A good Answer.—ஒரு உறைப்பானமறுமொழி.
சில கிறிஸ்தமதானுசாரிகளிடத்தில் காணப்ப
ட்ட தவறுகளின் நிமித்தம் அம்மார்க்கத்தை நிந்
தைபண்ணிவந்த ஒரு அஞ்ஞானியைப்பார்த்து ஒ
ரு கிறிஸ்தவன், அண்ணை, இவைகளிலும் பதின்ம
டங்கு கொடிதான தாறுமாறுகளை உங்கள் குருக்க
ள்மார் ஐயமார்தானும் செய்துவருகிறார்களே! அ
தை நீங்கள்தாக்கிப்பிடித்துத் தூற்றி, அவர்களை அ
நாசாரிகளென்று தள்ளிவைத்ததுமுண்டாவென்
றான். அவன் இல்லையென்றான். கிறிஸ்தவன், நீ
ர் கிறிஸ்தமதானுசாரிகளிடத்தில் தூயதன்மைகா
ணப்படவேண்டுமென்று காத்திருந்தால், கிறிஸ்த
சமயம் பரிசுத்தமானது என்பதை ஒத்துக்கொண்
டதாயிற்று. ஆட்களில் வழுப்பிடிக்கப் புறப்பட்ட
தினால் சமயத்தின் உண்மையைக்கூடியளவும்உப
சாரம்பண்ணினீரேயென்றான்.

## விளம்பரம்.

இங்கிலீசு தமிழென்னும் பாஷையிலுள்ள சிலஅ
ளவை நூல்களைத் திரட்டிச் சுருக்கமாய் எவர்க்கு
ம் உபயோகமாகும் பொருட்டாய் தமிழிலொரு பிரப
ந்தம், ஸ்ரீ. ஸ்ரீ. வேலாயுதர் முதலித்தம்பியென்பவர்
செய்திருப்பதால் அத்தை வாங்கப் பிரியமுள்ளோர்
தங்கள் கையொப்பத்தையும் வாங்கவிருக்கும் பிர
திகளின்தொகையையும் இதன்கீழ்க் கையொப்பம்
வைத்திருக்கிறவருக்கு அறிவிக்கும்படி இத்தால் அ
றிவிக்கப்படுகின்றது. கையொப்பக்காரரின் தொ
கை சேர்ந்தவுடனே அச்சிற் பதிப்பிக்கப்படும். பிர
தி ஒன்றின்விலை சிலின், க. இப்படிக்கு,
கதிர்காமர் இராமலிங்கம்.
வண்ணார்பண்ணை, ௲அ௱ருச ௵. மாசி௴.
உச. ௳.

*உபசு

# MORNING STAR.

## Jaffna, Thursday, April 13, 1854

Personal Experience.—A correspondent has sent us a communication regarding the ordination of Rev. Mr. Watson, on the 13th ult., from which we make the following extract, giving some account of the personal experience of the candidate, which was related by him in the Tamil language, at the time of the ordination.

"I was born in 1824 of heathen parents, and was brought up in gross ignorance and superstition. About the age of nine I was fully convinced that idols were no gods. In 1835 I was taken as a private student by the Rev. Mr. Stott at Pt. Pedro, where I regularly attended the morning and evening family devotions, as well as the Sunday services, and though I did this with a view to ingratiate myself into the favor of Mr. S., yet I daily became acquainted with the word of eternal life. In September, 1837, I went to Trincomalie and was placed under the parental care and tuition of the same minister. Here, after meeting in the class meeting as a candidate for baptism for a considerable time, I was initiated into the church by the rite of baptism. But I was altogether ignorant of the inward and spiritual grace symbolized by this outward and visible sign. It was in 1839 that I was deeply awakened to a sense of my real state through a sermon preached by the Rev. Mr. Stott on the text, "Except a man be born again," &c. By my class leader I was clearly shown the necessity of regeneration or the new birth, and the distress on account of my sins was great. I became more and more acquainted with the sinfulness of my heart. One Tuesday, on my return from the class, I fell down on my knees in a closet, and while engaged in prayer I was enabled to behold the lamb of God, hanging on the cross. At the end of 1840, I was taken as a theological student, and was partly engaged as a teacher in the English school and partly as an exhorter. In 1845 I was examined and appointed as a catechist by the district meeting held at Batticaloa. In the beginning of 1846 I came to Jaffna and labored in the same capacity till the beginning of 1848, when I was recommended by Rev. Mr. Percival as a candidate for the ministry. I was accepted, and have since been a candidate. I am a methodist minister by choice. In the presence of God and in the presence of the congregation I desire to consecrate myself afresh to the service of God. It is my highest ambition to be a preacher of the everlasting Gospel in connection with the Wesleyan Mission Society to the day of my death.

Keeping the Teeth Clean.—At a meeting of the American Academy, Dec. 1849, a paper was read by Dr. H. I. Bowditch, on the animal and vegetable parasites infesting the teeth, with the effect of different agents in causing their removal and destruction. Microscopical examinations had been made of the matter deposited on the teeth and gums of more than forty individuals, selected from all classes of society, in every variety of bodily condition; and in nearly every case animal and vegetable parasites in great numbers had been discovered. Of the animal parasites, there were three or four species, and of the vegetable one or two. In fact, the only persons whose mouths were found to be completely free from them, cleansed their teeth four times daily, using soap once. One or two of these individuals also passed a thread between the teeth to cleanse them more effectually. In all cases the number of the parasites were greater in proportion to the neglect of cleanliness. The effect of the application of various agents was also noticed. Tobacco juice and smoke did not impair their vitality in the least. The same was also true of the chlorine tooth-wash, of pulverized bark, of soda, ammonia, and various other popular detergents. The application of soap, however, appeared to destroy them instantly. We may hence infer that this is the best and most proper specific for cleansing the teeth. In all cases where it has been tried, it receives unqualified commendation. It may also be proper to add, that none but the purest white soap, free from all discoloration, should be used.

To England via Sydney.—The last link in the great chain of ocean steam communication is complete. It is now possible to go round the world without calling in the aid of any other agency than steam. The Australian Direct Steam Navigation Company have obtained their charter, and their vessels will be immediately ready to occupy the line. The steamers of this company will sail as the crow flies. From Milford Haven, the south-western extremity of Wales, to Navy Bay, the European side of the Isthmus of Panama, the distance is 4,552 miles. The Isthmus is now crossed by a railway, nearly completed, and already passable for travelers. By this line, the Isthmus is crossed in about two hours, and the passenger proceeds by steamer to Tahiti. From thence, his voyage is direct to Sydney, the distance from Panama being 7,839, and from England 12,391 miles. It is now possible to start from Calcutta to visit Sydney, or Tahiti, the West India Islands, or South America, New York, or the Canadas without quitting the deck of a steamer except for a railway train. The fairest portions of the earth's surface, and the most interesting of modern capitals may be visited within a twelve month's furlough. It is not too much to say that from Canton to New York, from Sydney to the Mediterranean, there is not one important city which may not be reached from Calcutta by steam within three months.

*Friend of India.*

Temperance in America.—In America, the cause is progressing—says the Madras *Journal*—at a rate which leaves England far behind. The theory of prohibition which, in the old country, will be subjected to innumerable discussions and objections, spreads in the new, with astonishing rapidity. Men whose craft is in danger and who make fortunes by the traffic, of course, oppose; and their influence against the movement is not small; but, on the other hand, the great bulk of the respectable and Christian portion of the people, are decidedly in favor of prohibition; and so determined are they to carry this measure, that, in many places, other political distinctions are forgotten; and the question which decides the election of candidates for office is, "will he support or will he oppose a Maine Law." The great cities which are most enriched as well as most cursed by the traffic, seem to offer the strongest resistance, but the abstainers do not despair of ultimately carrying these. It is impossible to estimate the probable results of a suppression of the traffic in the entire Union. In those states where the trade has been put down, the jails are being shut up, crime is diminishing, diseases, accidents, deaths are less frequent; and the whole population enjoy unexampled peace and prosperity: and there is no reason why these effects should not follow in the entire Union. The more we consider the progress of the work in America, the more cause for astonishment do we perceive. Intensely jealous, like the nation from which they have sprung, of their personal liberties; resisting unto blood the imposition of taxes they deemed unjust; they are now by thousands, imposing a restraint upon themselves, and voluntarily bringing their property to be taxed in order to secure the efficient execution of their own law. We can regard it as scarcely less than a social miracle; and, if the patriotism is to be admired, which brings private property as a voluntary gift to the treasury of the state, when a foreign invader has to be repelled, no less worthy of honor is that patriotism which offers its wealth for taxation in order to put down a traffic, far more destructive than an invading army, and far more insidious than the most dishonorable foe.

Modesty.—Who art thou, O man! that presumest on thine own wisdom? Or why doest thou vaunt thyself on thine own acquirements? The first step towards being wise, is to know that thou art ignorant; and if thou wouldst not be esteemed foolish in the judgment of others, cast off the folly of being wise in thine own conceit. As a plain garment best adorneth a beautiful woman, so a decent behavior is the greatest ornament of wisdom. The speech of a modest man giveth lustre to truth, and the diffidence of his words absolveth his error. He trusteth not his own wisdom; he weigheth the counsels of a friend, and receiveth the benefit thereof. He turneth away his ear from his own praise, and believeth it not; he is the last in discovering his own perfections. Yet as a veil addeth to beauty, so are his virtues set off by the shade which his modesty casteth upon them. But behold the vain man, and observe the arrogant: he clotheth himself in rich attire; he walketh in the public street; he casteth round his eyes, and courteth observation. He tosseth up his head, and overlooketh the poor; he treateth his inferiors with insolence; and his superiors, in return, look down on his pride and folly with laughter. He despiseth the judgment of others; he relieth on his own opinion, and is confounded. He is puffed up with vanity of his imagination, his delight is to hear and to speak of himself all the day long. He swalloweth with greediness his own praise, and the flatterer in return eateth him up.

*Mason—Selected by F. G. S.*

The Age of Gold.—News has just come to hand of the discovery of gold at the Cape of Good Hope. The *Colombo Observer* of the 3d inst., contains a very long account of the discovery, and a private letter of ours from the Cape confirms the intelligence, and states that great excitement prevails at Cape Town and in that vicinity. It is said that nuggets or pieces have been found, some of them of a quite large size.

The discovery of gold in Ceylon appears to amount to very little. The rains have interfered with the digging, and the amount found is so small it will not pay for the washing, or it does not as yet.

